| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 09.03.2026 | |
| CC No. 135 /2022 | |
| சாட்சி :PW3 | |
| பெயர் : திரு. மணிமுத்து | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சுப்பையா | தொழில் : விவசாயம் |
| கிராமம் : சீகம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 47/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த சுப்பையா எனது தகப்பனார். 29.02.2020 அன்று எனத அப்பா சொந்த ஊரிலிருந்து துவரங்குறிச்சிக்கு குந்தாலம், கடப்பாறை ஆகியவற்றை புதுப்பிப்பதற்கு தொடர்பாக எனது அண்ணன் மகன் பூமிநாதனை அழைத்துக்கொண்டு Honda Activa வாகனத்தில் சென்ற போது மதுரை – திருச்சி சாலையில் துவரங்குறிச்சி நுழைவாயிலில் சிக்னல் அருகே கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டு துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்த போது எனது அப்பா இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். எனது அப்பாவிற்கு தலையிலும்,இரண்டு கைகளிலும், கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டது. எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். பூமிநாதனுக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து நடந்தது பற்றி எனக்கு வெள்ளையன் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். விபத்து எப்போது நடந்தது என்று எனக்கு தெரியாது. தகவல் எனக்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்பாக தெரியும் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் மனு குமரேசன் என்பவருக்கு கொடுத்தார். நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகாரில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. திருச்சி – மதுரை நான்கு வழிச்சாலை என்றால் சரிதான்.

மதுரை – திருச்சி ரோட்டில் துவரங்குறிச்சி நுழைவாயில் வழியாக சென்றார் என்றால் சரிதான். எனது தந்தை விபத்தில் இறந்து போன போது வயது சுமார் 70 வயது இருக்கும். எனது தந்தைக்கு எந்த வேலையும் கிடையாது.

3. இந்த விபத்து இழப்பீடு வழக்கு போடப்பட்டதா என்றால் எனது தம்பி குமரேசன் வழக்கு தாக்கல் செய்தார், மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. எனது அண்ணன் மகன் இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்து தடுமாறி காரில் விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் எனது தந்தைக்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.